கொடுக்கப்பட்டு இருக்கின்றன? இனி வருங்காலத்தில், பணிபுரிந்துகொண்டிருக்கக்கூடிய அனைத்து அர்ச்சகர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கு வீடு கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 45 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. 33 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இத்திட்டத்திற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் போதுமான நிதி இல்லாத நிலையில் பணிகள் தடைபட்டுள்ளன. இத்திட்டத்திற்காக கூடுதல் நிதி பெற்று இப்பணிகளை விரைவில் நிறைவு செய்யும்படி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. திண்டுக்கல் மாவட்டத்தில் 2 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. 4 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. தேனி மாவட்டத்தில் ஒரு வீடு கட்டப்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் 15 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. கரூர் மாவட்டத்தில் 2 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. கடலூர் மாவட்டத்தில் 26 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. திருநெல்வேலி மாவட்டத்தில் 24 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இதுவரையில் 45 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. 33 வீடுகள் அர்ச்சகர்களுக்காக கட்டப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 54, திரு. எஸ். மகாலிங்கம், மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர்.

கலைக் கல்லூரி

23536—திரு. எஸ். மகாலிங்கம்:

மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2004 பிப்ரவரி 12]

(அ) அவினாசி தொகுதியில் கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தேவையின் அடிப்படையில் நிதிநிலைமைக்கேற்ப அந்தந்தப் பகுதிகளைச் சார்ந்த பல்கலைக்கழகங்களே புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் துவக்கும். தற்போதுள்ள நிதி நெருக்கடியில் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை பல்கலைக்கழகங்களால் துவக்க இயலாது. எனவே அவினாசி தொகுதியில் கலைக் கல்லூரியை அரசால் அமைக்க இயலாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். மகாலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெஞ்சம் கொண்டு விளங்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் கல்விக்கு அதிக அளவு முக்கியத்துவம் கொடுக்கப்படும் நிலையில் அவினாசியில் அரசு கலைக் கல்லூரி ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இல்லை என்றாலும்கூட அரசு நிதி உதவியோடு தனியார் கலைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் aided Colleges பற்றிக் குறிப்பிடுகிறார் என்று நான் கருதுகிறேன். நிதி தாராளமாக இருந்தால் நிதியை தனியாருக்குக் கொடுத்து கல்லூரிகள் ஆரம்பிப்பதைவிட, அரசே ஆரம்பித்துக்கொள்ளலாம். ஆனால் இப்பொழுது அந்த நிலை இல்லை. இப்பொழுது தமிழ்நாட்டில் மட்டும் 162 அரசு உதவி பெறும் கல்லூரிகள் இருக்கின்றன. அந்த 162 அரசு உதவி பெறும் கல்லூரிகளுக்கு மட்டும் Grant-in-Aid என்ற வகையில் ஆண்டுக்கு ரூபாய் 290 கோடியை அரசு மானியமாக வழங்கி வருகிறது. இதுவே அரசுக்குக் கூடுதலான செலவாக இருக்கின்றது. எனவே அரசு உதவி பெறும் கல்லூரிகள் துவக்குவதற்கு வாய்ப்பு இல்லை. இருந்தாலும் அரசின் நிதி உதவி

இன்றி சுய நிதிக் கல்லூரிகளைத் திறப்பதற்கு தனியாரிடமிருந்து விண்ணப்பங்கள் எதுவும் பெறப்பட்டால், இதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் 10-50

திரு. எஸ். மகாலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கலைக் கல்லூரிகளில், தற்போது காலியிடமாக உள்ள விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்புவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அரசுக் கல்லூரிகளில் காலியாக இருக்கிற விரிவுரையாளர்களின் பணியிடங்களை நிரப்புவதற்கு தமிழக முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதன் பேரில், 750 விரிவுரையாளர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுவிட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 55, திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு வணிகவரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

55—

தொடக்க கூட்டுறவு வங்கிக்குக் கட்டடம்

***32877—திரு. சோ. இராசேந்திரன்:**

மாண்புமிகு வணிகவரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, இளம்புவனம் தொடக்க கூட்டுறவு வங்கிக்கு நில ஆர்ஜிதம் செய்து, கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?